மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) 63.
(இ) 27.

திரு. எம். ராஜா அய்யர்: தலைவர் அவர்களே, உருது முன்ஷி முதல் தரம் 27 பேர்கள் இருப்பதாகத் தெரிகிறது. இவர்கள் ஓய்வு பெற ஓய்வு பெற,
பி.ப. 4–10 அந்த முதலாவது தர உருது மொழி முன்ஷிகளை இரண்டாவது நிலைக்கு மாற்றி விடுகிறார்கள் என்று அரசுக்குப் புகார் வந்திருக்கிறதா? எல்லோரும் முதல் நிலை உருது மொழி முன்ஷிகளாக இருப்பதற்கு அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன். மேலும் முதல் நிலை உருது மொழி ஆசிரியர்களுடைய எண்ணிக்கை வரவரக் குறைந்து வருகிறது என்பதை அரசு அறியுமா?

MR. CHAIRMAN : Supplementaries should always be short, Thiru Rajah Iyer.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, முதல் நிலை உருது மொழி ஆசிரியர்கள் என்று கருதப்படுகிறவர்கள் எண்ணிக்கை குறைந்து அப்படி முதல் நிலையில் இருந்தவர்கள் சிலர் கீழே இறக்கப்பட்டதாக விண்ணப்பங்கள் வந்தன. ஏற்கெனவே இருந்தவர்களாக இருந்தால், இறக்க வேண்டாம் என்று பரிசீலிக்கக் கூறப்பட்டிருக்கிறது. முதல் நிலை என்று கருதப்பட்டவர்கள் அந்த இரண்டாம் நிலையில் இருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் எப்படி முதல் நிலைக்கு உயர்த்தப்படுகிற நிலைக்கு வந்திருக்கிறதோ, அதே மாதிரி கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்து, 2,000 பேர்களும், அதற்குப் பிறகு 260 பேர் இரண்டாவது நிலையிலிருந்தாலும் முதல் நிலைத் தகுதி பெற்றிருக்கிற காரணத்தினால் முதல்நிலைத் தமிழாசிரியர்களாக ஆக்கலாமென்ற முடிவிற்கினங்க, இதைப்பற்றிப் பரிசீலிக்க வேண்டுமென்று கோரிக்கை வந்திருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

Keerampoor Town Panchayat

* 336 *Q.*—THIRU V. ISVARMURTI (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Keerampoor Town Panchayat was previously within the jurisdiction of Thuraiyoor Range, Tiruchirappalli district;

(*b*) if so, the reason for the taking out that Town Panchayat from Thuraiyur;

(*c*) whether the people of Keerampoor represented to include this town panchayat with Thuraiyoor Municipality ;

(*d*) whether they requested in the representation to convert the Town Panchayat into a Panchayat if it is not possible to include with Thuraiyoor ; and

(*e*) if so, the step taken thereon ?

கீரம்பூர் பேரூராட்சி

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி (திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டம் துறையூர் சாகத்தைச் சேர்ந்த கீரம்பூர் பேரூராட்சி ஏற்கனவே துறையூருடன் சேர்ந்திருந்ததா ?

(இ) ஆமெனில், துறையூரை விட்டுப் பிரிக்கப்பட்டதின் காரணம் என்ன ?

(உ) கீரம்பூர் மக்கள் துறையூர் நகராட்சியில் சேர்வதற்கு விண்ணப்பித்தார்களா ?

(எ) அவ்விண்ணப்பத்தில் துறையூருடன் சேர்க்க முடியாவிட்டால் பேரூராட்சியை ஊராட்சியாக மாற்றுவதற்குக் கேட்டுக்கொண்டார்களா ?

(ஐ) ஆம் எனில், அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நிர்வாக நலனைக் கருதி, 1945-ம் ஆண்டில் துறையூரிலிருந்து பிரிக்கப்பட்டு தனி ஊராட்சியாக ஏற்படுத்தப்பட்டது.

(உ) கீரம்பூர் பேரூராட்சி, தனது 18—9—72-ம் நாளிட்ட 71-வது தீர்மானம் மூலம் துறையூர் நகராட்சியுடன் இணைவதற்கு சம்மதம் தெரிவித்து கருத்தினை அளித்திருக்கிறது.

(எ) அரசினருக்கு இதுபற்றி விண்ணப்பம் ஏதும் வரவில்லை.

(ஐ) இக்கேள்விக்கு இடமில்லை.